செய்தி வெளியீடு எண்:369 நாள் :23.07.2015

<u>செய்தி வெளியீடு</u>

# கோ–ஆப்டெக்ஸ் தங்க மழைத் திட்டம் பரிசளிப்பு விழா

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய திட்டங்களில் ஒன்றான **“கோ–ஆப்டெக்ஸ் தங்க மழைத் திட்டம்”** வாடிக்கையாளர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றததைத் தொடர்ந்து, தீபாவளி 2014 மற்றும் பொங்கல் 2015 சிறப்பு விற்பனைக் காலங்களில் கோ–ஆப்டெக்ஸின் ரொக்க விற்பனையை பெருக்கும் பொருட்டு **“தங்க மழைத் திட்டம்”** 2014-15 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. வாடிக்கையாளர்கள் வாங்கும் ஒவ்வொரு ரூ.2,000/– மதிப்புள்ள துணி இரகங்களுக்கும் ஒரு கூப்பன் வழங்கப்பட்டது. அந்த கூப்பனில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, மிகச்சிறந்த முறையில் பதிலளித்த வாடிக்கையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலத்திலும் முதல் பரிசாக 10 நபர்களுக்கு 4 கிராம் தங்க காசும், இரண்டாம் பரிசாக 30 நபர்களுக்கு 2 கிராம் தங்க காசும் வழங்கப்படவுள்ளது. இந்தியா முழுவதும் உள்ள 11 மண்டலங்களில் 110 வாடிக்கையாளர்களுக்கு 4 கிராம் தங்க காசும், 330 வாடிக்கையாளர்களுக்கு 2 கிராம் தங்க காசும் ஆக மொத்தம் 440 வாடிக்கையாளர்களுக்கு 1.100 கிலோ கிராம் தங்கம் பரிசாக வழங்கப்பட்டது.

இந்த தங்க மழை பரிசு திட்டத்தில், சென்னை மண்டலத்தில் வெற்றி பெற்ற வாடிக்கையாளர்களுக்கு பரிசளிக்கும் நிகழ்ச்சி 23.07.2015 வியாழக்கிழமை இன்று காலை 11.00 மணி அளவில் சென்னை, எழும்பூர், கோ–ஆப்டெக்ஸ் தலைமை அலுவலக கூட்ட அரங்கில் **மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திருமதி S. கோகுல இந்திரா** அவர்கள் தலைமையில் மிகச் சிறப்புற நடைபெற்றது. சென்னை மண்டலத்தில் வெற்றி பெற்ற வாடிக்கையாளர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்க காசுகளை பரிசாக பெற்றார்கள். இதனைத் தொடர்ந்து, மற்ற மண்டலங்களிலும் வெற்றி பெற்ற வாடிக்கையாளர்களுக்கு தங்க காசுகள் பரிசாக வழங்கப்பட்டது.

கோ– ஆப்டெக்ஸ் நிறுவனம் வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில், புதிய வடிவமைப்பு மற்றும் வண்ணத்திலான சேலை இரகங்களை பெருமளவில் அவ்வப்போதுஅறிமுகப்படுத்தி வருகிறது. இன்றைய நிகழ்ச்சியின் போது, மூன்று வர்ணங்களைக் கொண்டு நெசவு நெய்யப்பட்ட "ஜெயதிரிகாம்பிகா சேலைகள்" என்ற பெயரில் புதிய இரக பருத்தி மற்றும் கோரா பட்டு சேலைகள் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்து விற்பனைக்கு வெளியிடப்பட்டது. ஜெயதிரிகாம்பிகா சேலைகளில், கோரா பட்டு சேலைகள் திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டி பகுதியிலும், பருத்தி சேலைகள் திண்டுக்கல், பரமக்குடி, அருப்புக்கோட்டை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் பகுதியில் உள்ள கைத்தறி நெசவாளர்களாலும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

"ஜெயதிரிகாம்பிகா பருத்தி சேலைகள்" ரூ.750 முதல் ரூ.2700 வரை நிகர விற்பனை விலையிலும், "ஜெயதிரிகாம்பிகா கோரா பட்டு சேலைகள்" ரூ.2800 முதல் ரூ.3000 வரை நிகர விற்பனை விலையிலும் கிடைக்கும்.

இந்த இனிய விழாவில் தமிழக அரசின் **கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப.,** அவர்கள், **கோ–ஆப்டெக்ஸ், மேலாண்மை இயக்குநர் திரு. தி.ந. வெங்கடேஷ், இ.ஆ.ப.,** அவர்கள், **கோ–ஆப்டெக்ஸ் தலைவர், திரு. K.V. மனோகரன்** அவர்கள், மற்றும் **கோ–ஆப்டெக்ஸ் துணைத் தலைவர் திருமதி S.ஜெயந்தி சோமசுந்தரம்** ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**